ஸ்ரீ:

# எதிர் சூழல் புக்கு — ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைவாரைப் போலே

[டாக்டர், ஸர். K. S. க்ருஷ்ணன், F. R. S. புதுடில்லி.]

ஸ்ரீபாஷ்யகாரர் அந்தரதிகரண ஸ்ரீ பாஷ்யத்தில் எம்பெருமான் விபவாவதாரங்களில் சரீர பரிக்ரஹம் பண்ணும்படியை நிரூபிக்குமிடத்தில் "பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம்" என்ற ப்ரஸித்தமான கீதா ஶ்லோகத்தை மேற்கொண்டு அருளிச் செய்வதாவது: "ஸாதுபரித்ராண மேவ உத்தேச்யம்; ஆநுஷங்கிகஸ்து துஷ்க்ருதாம் விநாஶ: ஸங்கல்ப மாத்ரேணாபி ததுபபத்தே:" என்று. இந்த ஸ்ரீ ஸூக்தியிலிருந்து துஷ்க்ருத்விநாஶம் ஸங்கல்பஸாத்யமாகிறாப்போலே ஸாது பரித்ராணம் ஸங்கல்ப ஸாத்யமாகாது என்பதும் தெளிவாகிறது. ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளைக்கொண்டு ஸ்ரீபாஷ்யகாரர் ஸூத்ர வாக்யங்களை ஒருங்கவிடுவர் என்ற ஆசார்ய ஹ்ருதய சூர்ணைக்கிணங்க ஸாது பரித்ராணம் ஸங்கல்ப மாத்ரத்தால் தலைக்கட்டவொண்ணாதென்கிற விசேஷார்த்தத்துக்கும் அடி ஆழ்வார்பாசுரமாயிருக்கும் என்று நம் ஸ்வாமி அண்ணா பலதடவையருளிச் செய்திருக்கிறார்கள். அப்பாசுரமாவது "தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" என்பது. "நாஹம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந, கரஸ்தகமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் தவ" என்று எம்பெருமானை நேரில்ஸேவித்து அவனுடைய திருவடிகளில், தான்படாதனபட்டுக் கொய்த தாமரை மலர்களை ஸமர்ப்பிக்கவேணுமென்கிற அவா எப்படி நேரில் ஸேவையில்லாமல் ஸங்கல்பமாத்ரத்தால் அறக்கூடும்?

ப்ரக்ருத ஶ்லோகத்தின் கீதாபாஷ்யத்தில் ஸாதுபரித்ராணம் விவரிக்கப்படுகிறது. 'மத்ஸ்வரூப சேஷ்டிதாவலோகநாலாபாதி தாநேந தேஷாம் பரித்ராணாய" என்று. இங்கு ஆதி சப்தத்தால் ஸகாட பரிஷ்வங்க ப்ரதாநாதிகள் குறிப்பிடப்படுவதாகவும், இவற்றையெல்லாம் ஒரேதடவையாக அள்ளிக் கொடுத்து விடாமல் ஸாத்மிக்க ஸாத்மிக்க க்ரமேண கொடுத்தருள்வதையே பரித்ராணத்திலுள்ள உபஸர்க்கம் குறிப்பிடுவதாகவும் ஸ்வாமி அண்ணா நிர்வாஹங்கள்.

"உபமான மஶேஷாணாம் ஸாதூநாம்" என்று ஸாதுக்களுக்கெல்லாம் உபமான பூமியாகக் கொண்டாடப்படும் ப்ரஹ்லாதாழ்வான் பாசுரமும் "அவலோகநதாநேந ஹூயோமாம் பாலயாச்யுத" என்று. அவலோகநதாநாதிகளே ஸாதுபரித்ராணமென்று கீதாசார்யனுடைய பரித்ராணத்தை இங்கு பாலனமென்கிறது உபஸர்க்கமில்லாமல். பசியராயிருப்பார் அட்டசோறுமுண்ணவேணும் என்றிருப்பவராகையாலே ஸாத்மிக்குமா என்ற கேள்வி அவர்கள் திருவுள்ளத்திலெழ ப்ரஸக்தியில்லையே,

விநாஶாயச என்ற சகாரத்தால் துஷ்க்ருத விநாஶமும் ஸாதுபரித்ராணார்த்தமாகவே என்று தேறுகிறது. இவ்வர்த்தம் ஈட்டுப் பாசுரங்களில் அநேக இடங்களில் காணலாம். 'ஸஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:" என்ற ஸ்ரீராமாயண ஶ்லோக வ்யாக்யானத்தில்,

[வதார்த்திபி:] தாங்கள் பட்ட நலிவாலே திருவுள்ளத்துக்குப் பொருந்தாதவற்றையும் விண்ணப்பஞ்செய்தார்கள். ஒருவனையழியச் செய்ய ஒரு நாடுமாகப் பிழைக்குமாகிலாகாதோ என்று அழியச்செய்தானத்தனை. "அர்த்தித:—தன்னடிச்சோதிக்கெழுந்தருளுந்தனையும் திருவுள்ளத்திற்பட்டுக் கிடந்ததிதுவே.—

என்றும், உயிரோடே தலை சாய்க்குமானால் அழிக்கிறதென் என்றும்—"யதி வா ராவண ஸ்வயம்" என்ற ஶ்லோக வ்யாக்யானத்தில் 'விஹீஷணஸ்து தர்மாத்மா' என்று தனக்கென்ன ஒரு கைம்முதலுண்டாகையாலே நாளை வரவுமாம். அரைக்ஷணம் கிட்டாவிடில் நாசமாயிருக்கிறது அவனுக்கேயிறே. ஆனபின்பு அவனையன்றோ முற்படக்கைக்கொள்ள வேண்டுவது. இனித்தானிவனைக் கைக்கொண்

டால் இவனும் இவன் தன்னோடே நால்வரு மாய்ப்போம். ராவணனைக் கைக்கொண்டால் துறுப்புக்கூடாகக் கைக்கொண்டதாகலாப். மஹாராஜ ரொருவரையு மங்கீகரிக்க வாநர ஜாதியாக வாழ்ந்துபோனல் போலே என்றும் "மரணாந்தாநி வைராணி." யின் வ்யாக்யானத்தில்—

இவன் ஜீவிக்கிற நாளிலே நாம் செய்யும் நன்மை இவன் விலக்காதொழிவது காண் என்றிருந்தோம் : அது அந்நாளில் பெற்றிலோம் என்றும் வ்யாக்யான பங்க்திகள்.

இவ்வர்த்தம் "ஈஶ்வரனவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை" என்று ஜீயரருளிச் செய்வர் என்ற ஸ்ரீவசன பூஷண சூர்ணையிலும் விசதமாகக் காணலாம். மற்றது நின்சரண் நினைப்பக்கொடியவாய் விலங்கினுயிர் மலங்கக் கொண்ட சீற்றமொன்றுண்டுள தறிந்து என்ற பெரிய திருமொழிப்பாசுரத்து வ்யாக்யானமும் இங்கு அநுஸந்தேயம். [நின்சரண் நினைப்ப] இப்படி நோவுபடா நிற்க இவன் நினையாதொழிந்தது ஒரு நீர்ப்புழுவுக்காக ஸர்வேஶ்வரனை அழைக்கவோ நாமே வெல்லுகிறோம் என்றிருந்தான். இவன் இப்படி நெடுநாள் நோவுபடுகிறபடி அறியாதிருக்கிறானன்றே. இவனுடைய அஹங்கார ஸ்பர்ஶமற்ற்ரு முகங்காட்டுகிறோமென்றிருந்தானத்தனையிறே. [சரண் நினைப்ப] இவன் மிடுக்கற்று மநஸா அசிந்தயத் ஹரிம் என்கிறபடியே திருவடிகளை நினைக்க. ... ...

[கொடியவாய் விலங்கு] முதலை ஆனையின் காலையன்றோ பற்றிற்று. புண்படுவது தம் திருவுள்ளமிறே. ஒரு வைஷ்ணவனுக்கு வந்த ஆபத்துத் தனக்கு வந்ததாக நினையாதவன்று வைஷ்ணவத்வமில்லை என்றிருக்கவடுக்கும்....

கோபஸ்ய வஶமேயிவாந் — சரீரம் புண்பட்டால் சரீரி பேசாதிரானே. வந்தேறியான தேஹத்தைப் பற்றி சேதநன் பின்னே போமாபோலே. இவன் கர்மமிட்ட வழக்காமாபோலே அவன் அநுக்ரஹமிட்ட வழக்காய் அதின்பின்னே போகா நிற்கும். [கொண்ட சீற்றமொன்றுண்டு] தரித்திரனானவன் தனிகனை அடையுமாபோலே சீற்றமுண்டு என்றாய்த்து இவர் பற்றுகிறது. ஆஶ்ரயிப்பார்க்கு உறுப்பான குணங்களிறே ஸௌஶீல்யாதிகள் ; விரோதி நிரஸநத்துக்குப் பரிகரமிறே சீற்றம்— என்று.

ப்ரக்ருத கீதா ச்லோகத்தை விவரிக்கும் ஈட்டுப் பாசுரங்களில் ஸ்ரீ பாஷ்யகாரருடைய நிர்வாஹத்தை ஸ்திரீகரிப்பதோடுகூட அதற்கு அநுஸரணையாக தர்ம ஸம்ஸ்தாபனத்தையும் ஸாது பரித்ராணத்தோடு இணைத்து அவ்விரண்டின் பலமாக வருவது துஷ்க்ருத் விநாஶம் என்று ரஸமாக அருளிச் செய்கிறார் வடக்குத் திருவீதிப்பிள்ளை. ப்ரஹ்மாதிகளுக்கும் உத்பாதகனாய் அவர்களுக்கு ரக்ஷகனான ஸர்வேச்வரன் அவர்கள் தாங்களும் காலிடமாட்டாத பூமியிலே வந்து அவதரிக்கைக்கு ஹேது வென்? என்னில் அவன்தான் அருளிச்செய்து வைத்ததுவே ஹேது "பரித்ராணாய ஸாதூநாம்" என்றானிறே. "ஆச்ரயிக்குமவர்களுக்கு இதிலே த்வரை பிறக்கைக்காகவும், ருசிஜனகனைக்காகவும் வந்து பிறப்பன். அதின் பலமாய் வருமதிறே துஷ்க்ருத்துக்களுடைய விநாஶம்" என்று அருளிச் செய்ததுவே ஹேது வென்கிறார் : என்று. இங்கு ருசிஜநகனைக்காகவும் என்றது தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டு.

ஆக ருசி ஜநநமும் த்வரா ஜநநமும் த்ருஷ்டிசித்தாபஹாரி ஸ்வஸௌந்தர்ய பாதர்ஶநமின்றிக் கூடாமையாலே அவற்றுக்கே ப்ராதாந்யம் துஷ்க்ருத விநாஶம் ஸங்கல்பமாத்ரத்தாலே செய்யலாமாகையாலே இது அப்ரதாந மென்றபடி" என்பது இவ்விடத்து ஜீயர் அரும்பதவுரை.

மேலும் அவனவதரித்துப் பண்ணினவையெல்லாம் தமக்காக என்றிருப்பர் ஆழ்வார். பிறரனர்த்தம் கண்டிரங்குவது ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணமாமாபோலே ஆஶ்ரிதரிலே ஒருவனுக்குக் கிடைத்த பேறும் தன்னதாக நினைத்திருப்பதும் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணமாகையாலே. இந்த லக்ஷண பூர்த்தியும் இங்கேயன்றோ ?

ஆழ்வாருடைய இம்மநோபாவத்தை கேசவன்தமர் திருவாய் மொழியில் "மதுசூதனையன்றி மற்றிலேனென்று எத்தாலுங் கருமமின்றி, துதிசூழ்ந்த பாடல்கள் பாடியாட நின்றூழி யூழி தொறும், எதிர் சூழல் புக்கெனைத்தோர் பிறப்பும் எனக்கே யருள்கள்

செய்ய, விதி சூழ்ந்ததாலெனக்கேலம்மான் திரிவிக்கிரமனையே'' என்ற பாட்டில் தெளிவாகக் காணலாம். தாம் பிறவிகள் தோறும் தம்மை வசீகரிக்கைக்கீடான அவதாரங்களைப் பண்ணித் தம்மை வசீகரித்ததோடுகூட அது செய்தன்றி தரிக்கமாட்டாத எம்பெருமானுடைய க்ருபா பாரதந்த்ர்யத்தையும் விவரிப்பது இப்பாட்டு. இங்கு எதிர்சூழல் புக்கு என்பதை அவதாரபரமாக்கி எல்லா வ்யாக்கியானங்களும் நிர்வஹிப்பனவை. "சூழல் பல பல வல்லான் தொல்லையங்காலத்து'' என்ற பாட்டின் ஈட்டில் வடக்குத் திருவீதிப்பிள்ளை சூழலை அவதாரமென்பானென்? என்று கேள்வி பிறப்பித்துத் தாமே ஸமாதானமுமருளிச் செய்கிறார்; சேதநரைத் திருத்திக் கொள்ளுமதாகையாலே என்று. இதையிட்டே அவதார நிரூபகம் போலும். "மதுசூதனனையன்றி'' திருவாய்மொழியில் இந்த அவதாரமான நிர்வாகம் என்னம்மான் திரிவிக்கிரமனையே என்பதோடு நன்று பொருந்தும். எம்பெருமானாரைப் போலே தலைகுனியாதவர்க்கும் தப்பவொண்ணாதபடி அடியிட்ட அவதாரமிறே இது. இந்த பூரிதானத்துக்கும் தப்பினதை யிறே ஆழ்வார்கள் திருவுள்ளத்தில் கொண்டு பலவிடங்களிலும் நொந்தது.

சேதனருக்கு ருசிபிறப்பித்து அகப்படுத்திக் கொள்வதே அவதாரங்களில் மட்டுமின்றி எம்பெருமானுக்கு என்றும் நிலைநின்ற ஸ்வபாவமிறே. எதிர் சூழல் புக்குத் திரிகிற ஸர்வ பூத ஸுஹ்ருத்தான என்று அர்ச்சிராதியிலும் எனக்கே நல்லவருள்களென்னும்படி ஸர்வ ஸௌஹார்த்தம் என்று ஆசார்ய ஹ்ருதயத்திலும் ஸ்ரீ ஸூக்திகள்.

இதுபற்றி எதிர் சூழல் புக்கு என்ற பதங்கள் வ்யாப்திக்கும் மிகப் பொருந்துமாகையாலே "எதிர் சூழல்புக்கு—ஒருவனைப் பிடிக்கநினைத்து ஊரைவளைவாரைப்போலே வ்யாப்தியும்'' என்று ஸ்ரீ வசந பூஷண சூர்ணைகள். இவ்விடத்து மணவாளமாமுனிகள் வ்யாக்யானமாவது.

எதிர் சூழல்புக்கு என்றது எனக்குத் தப்பவொண்ணாதபடி, பார்த்த விடமெங்கும் தானேயாம்படியான வ்யாப்தியிலே யுள்புக் கென்றபடி. "எதிர்சூழல்'' என்கிறது அவதார பரமாக மற்றுள்ளாராலே வ்யாக்யாதமாய்த்தாகிலும், இப்போது இவர் இவ்விடத்தில் வ்யாப்திபரமாக அருளிச் செய்கிறார். அநேக யோஜனைகளுண்டாயிறே யிருப்பது.'' என்று மேலும் அருளிச்செய்வதாவது "ஒருவனைப்பிடிக்க நினைத்தவன் அவனைத் தப்பாமல் பிடிக்கவேணுமென்னு மபிநிவேஶத்தாலே அவ்வூரைச் சேர வளையுமாயாய்த்து ஓராத்மையகப்படுத்திக் கொள்ளுகைக்காக ஸகல சேதநா சேதநங்களிலும் வ்யாபித்து நிற்கும்படி. ஆகையால் வ்யாப்தியும் ஸ்வார்த்தமாகவென்றிறே ஜ்ஞாநாதிகாநுஸந்திப்பதென்கிறார் [வ்யாப்தியும்] ஸர்வ ஸத்தாஹேதுவான வதுவுமுட்பட வென்றபடி. இங்கு அநேக யோஜனைகளுண்டாயிறே யிருப்பது, என்றும் வ்யாப்தியுமுட்பட, என்றும் அருளிச் செய்தது இவர்தாமே பின் சூழலை வளைப்பு என்று பொருள் கொண்டு அர்ச்சாவதார பரமாகவும் அருளிச்செய்யப் போகிறாராகையாலே.

"பாட்டுக் கேட்குமிடமும், கூப்பீடு கேட்குமிடமும், குதித்த விடமும், வளைத்தவிடமும், ஊட்டுமிடமும்..........என்ற சூர்ணை வ்யாக்யானத்தில் வளைத்த விடமென்பதற்கு, "பிறரறியாதபடி கிரைவளைத்துக் கொண்டிருக்கிற அந்தர்யாமிஸ்தலம்'' என்று அருளிச் செய்ததோடு கூட "நினைத்தது தலைக்கட்டுமளவும் மலையாளர் வளைப்புப் போலே இட்டவடி பேரவிடாதே வளைத்துக் கொண்டிருக்கையாலே'' என்தெஞ்சுளுக்கி அருளிச்செய்கிறார் மணவாள மாமுனிகள்.

இன்னொரு விஷயம் இங்கு குறிப்பிட வேண்டியதுண்டு. இப்போது இவர் இவ்விடத்தில் 'வ்யாப்திபரமாக' என்ற வ்யாக்யான பங்க்தியிலிருந்து லோகாசாரியரும் வேறு இடங்களில் அவதாரபரமாகவும் அருளிச்செய்திருப்பதாகத் தேறுகிறது. த்வயப்ரகரணத்தில் "ஸ்ருஷ்ட்யவதாராதி முகத்தாலே எதிர்சூழல் புக்குத்திரிகிற உம்முடைய பேற்றுக்கு நான் இரக்கவேணுமோ?'' என்ற ஸ்ரீ ஸூக்தியும் அர்ச்சிராதியில் இவர்கள் தன்மையைப் பார்த்துக் கைவிடாதே ஸ்வாபாவிக ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே எதிர் சூழல் புக்குத்திரிகிற ஸர்வஸுஹ்ருத்தான ஸர்வேஶ்வரன்'' என்ற ஸ்ரீ ஸூக்தியும் உதாரணங்களாகலாம்.